**செ. கு. எண்**: 379 **நாள்**:25.10.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 25.10.2012

தமிழகத்தில் பரவலாகப் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 20.10.2012 அன்று கடலூர் நகரம், புதுப்பாளையத்தைச் சேர்ந்த திரு. கோதண்டம் என்பவரின் மகன் செல்வன் பார்த்தசாரதி சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், நெடும்பாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. உத்திராபதி என்பவரின் மனைவி திருமதி நாகலட்சுமி மீது தென்னை மரம் விழுந்ததால் பலத்த காயடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மண்டகப்பட்டு கிராமம், அவ்வையார் குப்பத்தைச் சேர்ந்த திரு. குரிவரதன் என்பவரின் மகன் திரு. கிருஷ்ணன் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

21.10.2012 அன்று ராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், கோட்டைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. அர்ச்சுனன் என்பவரின் மகன் செல்வன் நந்தகுமார் மழை நீர் நிரம்பிய பள்ளத்தில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காமக்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளிதாஸ் என்பவரின் மகன் செல்வன் ஜெயப்பிரகாஷ் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

22.10.2012 அன்று விழுப்புரம் மாவட்டம், பெரியதச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் அப்பாசாமி;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், சிறுகாம்பூர் பகுதி கிராமத்தைச் சேர்ந்த திரு. கதிர்வேல் என்பவரின் மகன் திரு. சுதாகரன்;

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆவிடநல்லவிஜயபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. உதயகுமார் என்பவரின் மனைவி திருமதி தமிழ்செல்வி ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வீரப்பெருமநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மனைவி திருமதி பட்டம்மாள்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சாத்தப்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவரின் மனைவி திருமதி சகுந்தலா;

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், நாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சவரிமுத்து என்பவரின் மகன் திரு. ஜெயராஜ் ஆகியோர் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

23.10.2012 அன்று திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், சிங்கிகுளம் புது கிராமத்தைச் சேர்ந்த திரு. இசக்கி மற்றும் அவருடைய மகன் திரு. இசக்கி முத்து ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், தொண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மகன் திரு, கந்தன் இடி தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த பதினான்கு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**